# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.74/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தணிகாசலம் | மதம் | : இந்து |
| த/பெ | : வெங்கடேசன் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : காப்பாளர் | வட்டம் | : திருத்தணி |

**11.08.2026**
**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து என் அப்பாவின் பூர்வீக சொத்தா அல்லது கிரையம் வாங்கிய சொத்தா என்றால் பூர்வீக சொத்தாகும். தாவா சொத்து முத்துவேல் ரெட்டி, கோவிந்தசாமி ரெட்டி ஆகியோரிடம் தலா 37 1/2 அடி வீதம் மொத்தம் 75 அடியை என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு கிரையம் வாங்கிய விவரம் தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்து என் அப்பாவின் பூர்வீக சொத்து இல்லை என்றாலும் அது என் அப்பாவின் கிரைய சொத்து என்றாலும் சரியல்ல.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்று நான் சொல்லியிருப்பதில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து வெங்கடேசனின் கிரைய சொத்து என்றால் இல்லை. வழக்கு சொத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் எத்தனை கடைகள் உள்ளது என்றால் 3 வீடு, 2 கடை உள்ளது. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் அக்கையா நாயுடு தெருவில் உள்ளது. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லை

தெரியுமா என்றால் தெரியும். வீட்டிற்கு மேற்கே சாலை, வீட்டின் பின்புறம் சந்தும் கோவிந்தசெட்டியார் வீடும் உள்ளது, முருகேச செட்டியாரும் சரவணனும் வடக்கே தெற்கேயும் உள்ளனர்.

3. 2 கடை, வீடு வாடகைகள் யார் வாங்குகிறார்கள் என்றால் ஒரு வீட்டில் நான் உள்ளேன். 2 கடைகள் 2 வீடு காலியாக உள்ளது. மாடியில் அப்பா கொட்டகை போட்டு வசிக்கிறார். கடை வாடகைகளை அப்பா வாங்கி வருகிறார். என் அப்பா அரசு ஓய்வூதியம் பெறுகிறார் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் காப்பாளர் (Watchman) ஆவேன். என் அண்ணன் சரவணன் என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் MRF நிறுவனத்தில் வேலை செய்கிறார். என் அண்ணன் வழக்கு சொத்தில் இல்லை என்றால் சரிதான். பக்கத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார். தனது 5 குழந்தைகளுக்கு 5 சொத்துக்கள் என்ற கணக்கில்தான் 3 வீடுகள், 2 கடைகள் கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

4. இதே வழக்கு சொத்திற்கு சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.140/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.140/2019ல் சாமுண்டீஸ்வரி, வெங்கடேசன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை 2019ல் சாமுண்டீஸ்வரிக்கு வெங்கடேசன் இனாம் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு வெளி ஆட்கள் சொல்லி 2 வருடங்களுக்கு முன்பு தெரியும். என் அப்பா எனது பிள்ளைகளுக்கு மற்றும் சரவணன் பிள்ளைகளுக்கு இனாம் ஆவணம் எழுதி வைத்தார் என்றாலும் அந்த ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றாலும் தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரிந்து கொண்டே வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 30 வருடங்களாக திருத்தணியில் குடியுள்ளேன் என்றால் சரிதான். 2014ல் சாமுண்டீஸ்வரி கடை வைத்து ஜீவனம் செய்து வந்தார் என்றால் இல்லை.

5. தற்போதும் அந்த கடையில் அவருடைய பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடை காலியாகதான் உள்ளது. 2019ல் என் அப்பா சாமுண்டீஸ்வரிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததும் வீட்டு வரி சாமுண்டீஸ்வரி பெயருக்கு மாறி அவர் வரி செலுத்தி வந்தார் என்றால் இல்லை. நான் வழக்கு விவரங்கள் தெரிந்து கொண்டே வேண்டுமென்றே பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா இருக்கும்போதே என் அப்பா வாய்மொழியாக

அனைவருக்கும் சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. என் தாயார் இறந்து 4 வருடம் இருக்கும். எனக்கு வருடம் தெரியாது. என் தாயார் 2017ல் இறந்தார் என்றால் சரிதான். தேதி ஞாபகமில்லை. அனைவரையும் அழைத்து பேசிய பின்புதான் சாமுண்டீஸ்வரிக்கு என் அப்பா எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்பு நானும் என் அண்ணனும் சேர்ந்துதான் வாதியின் இனாம் பத்திரத்தை ரத்து செய்ய என் அப்பாவை வைத்து நடவடிக்கை எடுத்தோம் என்றால் சரியல்ல.

6. என் அண்ணன் சரவணன் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் வழக்கு சொத்தை கிரைய சொத்து என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)